------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.29 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று முதலீட்டு செயற்பாடு களின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கைப்பெற்றல்களின் பெறுமதி ரூபா 24,674,523 சேர்த்து காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 25,913,782 குறைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 1,452,196 பதிவழிக்கும் போது திரண்ட நிதியத்தில் வரவு வைப்பதற்கு பதிலாக கடை வாடகை வருமான கணக்கு வரவு வைக்கப் பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காணி மற்றும் பொறிகளின் பெறுமதி ரூபா 8,898,000 தொகையினை அகற்றும் போது ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்ட வீதிகள் பாலங்கள், மதகுகளின் பெறுமதி ரூபா 7,129,082 நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை மீளாய் வாண்டின் போது சரிசெய்யும் போது நடை முறை வேலைக் கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப் பட்டிருந்தது. மேலும் காணியாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 864,500 வீதிகள், பாலங்கள் மற்று மதகுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டிற்குரிய வேலை கடன் கொடுத் தோர் பெறுமதி ரூபா 3,900,000 கணக்கீடு செய்யும் போது உரிய ஆதனங்கள, பொறிகள் மற்றும் உபகரணங்கள் / நடைமுறை வேலைக் கணக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (உ) | கடந்த ஆண்டிற்குரிய ஆதனவரி பெறுமதி ரூபா 1,262,440 பதிவழிக்கும் போது திரண்ட நிதியத்தில் வரவு வைப்பதற்குப் பதிலாக ஆதன வரி வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் திரண்ட மிகை ரூபா 415,839,694 ஆக இருந்த போதும் ரூபா 123,750,969 ஆகவும் ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 3,312,001,271 ஆகவும் மீதியொன்று காணப்படாதிருந்தமையும் மூலன மானியக் கணக்கு மீதி ரூபா 239,527,288 ஆக இருந்த போதும் ரூபா 3,843,616,285 ஆகவும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

### 1.6.3 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடை வாடகை மீதி ரூபா 1,452,196 தொகையை பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | 2002 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீடு திருத்தி அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாண பிரதேச சபைகள் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 90 | முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்தல் வசதியீனமாக இருந்தமை யால் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது. | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 123,751,969 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,036,241 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 21,252,000 | 20,615,409 | 17,279,875 | 42,838,443 | 20,211,200 | 24,576,548 | 20,537,105 | 42,978,575 |
| (ii) | வாடகை | 5,678,400 | 7,419,115 | 7,594,810 | 1,339,174 | 8,303,400 | 7,578,365 | 7,734,024 | 2,700,683 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 820,000 | 1,278,120 | 728,320 | 9,000 | 1,520,000 | 1,102,512 | 1,226,012 | 64,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 18,215,805 | 18,359,896 | 18,359,896 | - | 14,211,838 | 16,515,843 | 16,515,843 | - |
| | மொத்தம் | 45,966,205 | 47,672,540 | 43,962,901 | 44,186,617 | 44,246,438 | 49,773,268 | 46,012,984 | 45,743,758 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனவரியும் வரியும் | | |
| i. மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 41,419,069 ஆன நிலுவை ஆதனவரி மீதியில் ஆண்டின் போது அறவிடப் பட்ட பெறுமதி ரூபா 7,249,283 ஆனமையால் அறவிடப்பட்ட வீதம் 18 சதவீதம் ஆன குறைந்த பெறுமதியையும், ஆண்டிற்காக சிட்டையிடப்பட்ட ரூபா 14,769,260 ஆன ஆதன வரி பெறுமதி ஆண்டின் போது அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 7,964,143 ஆனமையால் நடப்பாண்டில் அறவீட்டின் வீதம் 54 சதவீதமாகவும் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றோம். | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| ii. காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீளாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 23,431,264 தொகையும், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையே ரூபா 9,477,193 தொகையும், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 4,199,207 தொகையும் தொடர்பாக பிரதேச சபைகள் சட்டத்தின் 162 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை தடை செய்வதற்கு திட்டமிடப் பட்ட போதும் வாகையாளர்கள் கொடுப்பனவு செய்தமையால் மேற்கொள்ளப்பட வில்லை | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஹெனரத்கொட உப அலுவலகத்திற்குரிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் 5 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான முறையே ரூபா 381,244 மற்றும் ரூபா 539,320 கடை வாடகை நிலுவையாக காணப்பட்டது. | மாகாண கணக்கு குழுவின் தீர்மானத்தை பெற்றவுடன் கைவிடப்பட்டுள்ளது. | நிலுவை கடை வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற 495 பொது மக்கள் முறைப்பாடுகளில் 202 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டமையால் 59 சதவீதம் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | நபர்கள் விருப்பத்தின் பேரில் நிறைவேற்றுவதற்கு உள்ள அதிகாரத்தை வரையறுக்காமையினால் செயல் முன்னேற்றத்தை உச்ச அளவில் அடைந்து கொள்ளப்பட வில்லை. | பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கு இடையிலான ரூபா 214,924 தொகையும் மற்றும் 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையிலான ரூபா 364,109 தொகையும் மூலதன உதவி கடன் பட்டோர் மீதி அறவிடப் பட்டிருக்கவில்லை. | மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 579,033 ஆகும். | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) ஒரு வருடத்திற்குக் குறைந்த ரூபா 16,190,803 தொகையும், 01 முதல் 03 வருடங்களுக்கு இடையிலான ரூபா 14,520,682 தொகையும், 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையிலான ரூபா 1,032,350 தொகையும் மற்றும் 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான ரூபா 66,720 தொகையும் ஆன கடன்கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு வருடத்திற்குக் குறைந்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா 16,190,803 ஆகும். | கடன் கொடுத்தோர் மீதி தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 88,312 ஆன சேமிப்புக் கணக்கின் மீதி அதிக நலன்களைப் பெறக்கூடிய வகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் | அதிக நலன்களைப் பெறுகின்ற முதலீடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான காணிகளுக்குரிய அளவிடப் பட்டு உரித்துறுதி தயாரித்தல், வேலி அமைத்தல், நிலையான பெயர் பதாதை பொருத்துதல் மேற்கொள்ள வேண்டியிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட எல்லையின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக உரிய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாற்றலாகிச் சென்ற, ஒய்வு பெற்றுச் சென்று, சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 06 ஊழியர்களிடமிருந்து நிலுவை ஊழியர் கடன் மீதி ரூபா 305,853 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |